**20.10.2021**

**அ.வ.எண்.194/2015**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** வா.சா.1

நான் 1ம் பிரதிவாதிக்கு 28.8.2010ம் தேதியில் அனுப்பிய அறிவிப்பில் இவ்வழக்கு தாவா சொத்து எனது தகப்பனார் தேவராஜ் என்பவருக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டு அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6ல் 28.8.2010ல் அனுப்பிய அறிவிப்பில் எனது தகப்பனார் தேவராஜ் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே அறிவிப்பில் தாவா சொத்தினை அறிவிப்பு தேதியில் இருந்து 10 வருடங்களுக்கு முன்பு 1ம் பிரதிவாதிக்கு சுவாதீனம் ஒப்படைத்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. நான் அவ்வாறு சுவாதீனம் ஒப்படைக்கவில்லை. 28.8.2010 அறிவிப்பின்படி 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்தின் சுவாதீனம் ஒப்படைத்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 28.8.2010ன் அறிவிப்பில் 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்தினை ஒப்படைத்து விட்டதாக குறிப்பிட்டுவிட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எப்போது 1ம்

பிரதிவாதியிடம் தாவா சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைத்தேன் என்றால் 2010ம் வருடம் ஒப்பந்தம் செய்த சமயத்தில் தான் தாவா சொத்தின் சுவாதீனத்தை 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்தேன். இன்றைய தேதி வரை தாவா சொத்தின் சுவாதீனம் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ராதாவிடம் தான் உள்ளது என்றால் இல்லை. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி ராதா குடிசை வீடு கட்டி உள்ளார் என்றால் நான் ஒப்பந்தம் செய்த பின்பு தான் 1ம்பிரதிவாதி தாவா சொத்தில் கூரை வீடு கட்டினார். தற்போது கூரை வீடு அங்கு இல்லை. கூரை வீடு இல்லாத சமயத்தில் ஏன் குடிசை வீடினை அகற்றவேண்டும் என்று நான் வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் வழக்கு தொடர்ந்த சமயத்தில் தாவா சொத்தில் கூரை வீடு இருந்தது தற்போது கூரை வீடு அங்கு இல்லை ஆகையால் வழக்கு தொடர்ந்துள்ளேன். நான் கிரய உடன்படிக்கை செய்து கொண்டதாக கூறும் கிரய உடன்படிக்கை யார் யாருடன் எந்த நபர்களிடையே, எந்த தேதியில் செய்து கொள்ளபட்டது என்றால் 2010ம் வருடம் மாதம் ஞாபகம் இல்லை. நான், எனது தம்பி மாரி, மற்றும் சந்திரன் ஆகியோர் இணைந்து இவ்வழக்கு 1ம் பிரதிவாதி ராதாவுடன் கிரய ஒப்பந்தம் செய்து கொண்டோம். ஆனால் 1ம் பிரதிவாதி கிரயபத்திரம் எங்களிடையே பதிவு செய்து கொள்ளவில்லை. எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2015ம் வருடம் தாவா சொத்து குறித்து வில்லங்க சான்றிதழ் பெற்றதில் 1ம் பிரதிவாதி ராதா தாவா சொத்தினை அவர்களுடைய மகன்களான வசந்தகுமார் மற்றும் அஜித்குமார் ஆகியோர்களுக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார் என்பது தெரிய வந்தது. வழக்கு தாவா சொத்து 1ம் பிரதிவாதி அனுபவத்தில் இருந்தபடியால் அவருடைய பெயரில் பட்டா பெற்ற பின்பு அவருடைய மகன்களுக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார் என்றால் அது செல்லாது எங்களிடம் கிரய ஒப்பந்த பத்திரம் செய்து கொண்ட பின்பு செட்டில்மெண்ட் தவறுதலாக செய்துள்ளார். 1ம் பிரதிவாதி எங்களிடம் செய்து கொண்டதாக கூறும் கிரய ஒப்பந்த உடன்படிக்கை 2.9.2010ம் தேதி என்றால் 2010ம் வருடம் உண்மை ஆனால் தேதி, மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. எனது வாதுரையில் 2.9.2010ம் வருடம் 1ம் பிரதிவாதி உடன் கிரய ஒப்பந்த உடன்படிக்கை செய்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது அன்றைய தேதியிலேயே தாவா சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கபட்டுள்ளதாக எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக கிரய உடன்படிக்கை பத்திரத்தில் மொத்த கிரய தொகை முன்பணம் கொடுக்கபட்டுள்ளதா அதன் மதிப்பீடு மற்றும் மீதம் உள்ள கிரய தொகை ஆகிய விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எனது பிராதில் நான்

குறிப்பிட்டுள்ள கிரய உடன்படிக்கைக்கு உட்பட்ட கிரய தொகை முன்தொகை மற்றும் மீதி தொகை ஆகிய விவரங்களை பற்றி நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நானும் எனது சகோதரர்களும் 1ம் பிரதிவாதியிடம் இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி எந்தவிதமான கிரய உடன்படிக்கையும் செய்து கொள்ளாததால் தான் அதன் விவரங்களை இவ்வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் கிரய உடன்படிக்கை பத்திரம் 1ம் பிரதிவாதியிடம் உள்ளபடியால் அந்த விவரங்களை நாங்கள் இவ்வழக்கின் பிராதில் குறிப்பிடவில்லை. 1ம் பிரதிவாதியிடம் நாங்கள் எந்தவிதமான கிரய உடன்படிக்கையும் செய்து கொள்ளாதபடியால் தான் அதில் உள்ள விவரங்கள் மற்றும் ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிரய உடன்படிக்கையின் அசல் 1ம் பிரதிவாதியிடம் உள்ளது. அதன் நகல் மட்டும் தான் எங்களிடம் உள்ளது ஆகையால் தாக்கல் செய்ய இயலவில்லை. 1ம் பிரதிவாதியிடம் கிரய உடன்படிக்கை செய்து கொண்டதாக கூறுவது பொய் என்றபடியால் தான் இவ்வழக்கின் பிராதில் மற்றும் 28.8.2010ம் தேதியில் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பில் சுவாதீனம் குறித்து சங்கதிகள் மாறுபட்டு கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 28.8.2010ம் தேதியில் கொடுக்கபட்டள்ள அறிவிப்பில் தாவா சர்வே எண்கள் 1194/2ல் 10 செண்டும்

1194/1பில் 13செண்டும் மொத்தமாக 23 செண்டில் 7 செண்டு தாவா சொத்து என்றால் சர்வே எண் 1194/பில் 5 செண்டும் 1194/2ல் 2 செண்டு மொத்தமாக 7 செண்டு நிலம் தாவா சொத்து ஆகும். தாவா சொத்தின் 4 பக்க ஜக்கு பந்தி அறிவிப்பின் படி கிழக்கு பக்கம் போரூரான் முதலியார் மனை மேற்கு பக்கத்தில் ரோடு, வடக்கு பக்கத்தில் தேவராஜன் வகையறா தற்போது கன்னியப்பன் மனை என்றால் சரிதான். தெற்கில் சுந்தர் என்பவரது மனை என்றால் சரியல்ல. எனது மீதி மனை ஆகும். வா.சா.ஆ.6, 28.8.2010ம் தேதி அறிவிப்பில் தெற்கு பக்கத்தில் சுந்தர் என்பவரது மனை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஆங்கிலம் தெரியாது. வா.சா.ஆ.6ல் குறிப்பிடப்பட்டுள்ள அக்குவிடுதலை பத்திரத்தில் ஜக்குபந்தியில் தாவா சொத்தின் தெற்கில் சுந்தர் மனை என்று குறிப்பிட்டுவிட்டு தற்போது எனது மனை உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் தெற்கு பகுதியில் உள்ள சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 1194/2ல் மொத்த விஸ்தீரணம் 10 செண்டில் தாவா சொத்து 2 செண்டு போக மீதம் உள்ள 8 செண்டு எனக்கு சொந்தமானதாகும். தாவா சொத்தின் தெற்கு பக்கத்தில் உள்ள சொத்திற்கு நான் வில்லங்கம் சான்றிதழ் பெற்று பரிசீலித்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழ்

1194, 1194/1பி, 1194/2 ஆகிய சர்வே எண்களுக்கு உட்பட்டது. அந்த வில்லங்க சான்றிதழ் 1.1.2014 முதல் 18.5.2015 வரை உண்டானது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழில் 7.11.2016ம் தேதியில் பாகஅக்குவிடுதலை பத்திரம் கல்யாணி என்பவருக்கு லோகநாயகி, சண்முகம் மற்றும் ஜெயலட்சுமி என்பவர் செய்து கொள்ளபட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது நான் செய்து கொடுத்தது இல்லை. நான் பத்திர பதிவு அலுவலகத்திற்கு சென்று எந்தவிதமான ஆவணமும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள ஐக்குபந்தியாக வடக்கில் ராதா வீட்டு மனை, தெற்கில் ராஜேந்திரன், கிழக்கில் பூவராகவ முதலியார் இடம், மேற்கில் ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். கிழக்கு பக்கம் ராதாமனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது தான் 1ம் பிரதிவாதி ராதா என்பவரது வீடு என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சர்வே எண் 1194/2, 1194/1பில் 7 செண்டு சொத்தினை அனுபவித்து வந்தபடியால் தான் பாக அக்குவிடுதலை பத்திரத்திற்கு உட்பட்ட சொத்தின் வடக்கு பக்க ஐக்குபந்தியாக 1ம் பிரதிவாதி ராதாவின் வீட்டு மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பொய் ஆகும். 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை. அக்குவிடுதலை பத்திரத்தில் 4

எல்லைகள் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்த படியால் தான் வா.சா.ஆ.6 28.8.2010ம் தேதி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஜக்குபந்தியில் தெற்கு பக்கத்தில் சுந்தர் மனை உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் உண்மைகளை மறைத்து ஏற்கனவே பிரதிவாதிக்கு வாய்மொழியாக கிரயம் கொடுத்த சொத்தினை அபகரிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இவ்வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாய்மொழியாக ஏற்கனவே தாவா சொத்தினை பிரதிவாதிக்கு கொடுத்தபடியால் தான் 28.8.2010ம் தேதியில் அறிவிப்பில் 1ம் பிரதிவாதி பட்டா மாற்றம் செய்ய முயற்சிக்கின்றார் என்று அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த விவரங்களை மறைத்து அறிவிப்பு தேதிக்கு பின்னிட்ட தேதியில் கிரய உடன்படிக்கை செய்து கொண்டதாக கூறி பொய்யாக வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6ல் தாக்கல் செய்துள்ள 14.5.2015ம் தேதியிட்ட அறிவிப்பு உள்ளது என்றால் சரிதான். அந்த 14.5.2015ம் தேதியிட்ட அறிவிப்பில் 28.8.2010ம் தேதி அறிப்பினை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 14.5.2015ம் தேதியிட்ட அறிவிப்பில் 2.9.2010ம் தேதியில் கிரய உடன்படிக்கை

செய்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் 1ம் பிரதிவாதி மட்டும் தான் தாவா சொத்து குறித்து கிரய உடன்படிக்கை செய்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் பற்றி எந்த விவரங்களும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். எனது பிராதில் 1ம் பிரதிவாதி ராதா மற்றும் 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் கிரய உடன்படிக்கை செய்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிராதில் 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் மற்றும் 1ம் பிரதிவாதி ராதா உடன்படிக்கை செய்து கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 14.5.2015ம் தேதியிட்ட அறிவிப்பில் சுவாதீனத்தை 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கிரய ஒப்பந்தம் செய்து கொண்ட தேதியில் ஒப்படைத்து விட்டதாக தான் குறிப்பிட்டுள்ளேன். 1ம் பிரதிவாதியிடம் உள்ள தாவா சொத்தின் சுவாதீனத்தை என்னிடம் ஒப்படைக்ககோரி தான் 14.5.2015ம் தேதியிட்ட அறிவிப்பு அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6ன் படி 15 ஆண்டுகளாக தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சுவாதீனத்தில் உள்ளபடியால் அவருக்கு எதிரிடை அனுபவம் பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தொடர்ந்த சமயத்தில்

தாவா சொத்தின் சுவாதீனம் 1ம் பிரதிவாதி ராதாவிடம் தான் இருந்தது என்றால் சரிதான். எனது பிராதில் 31.5.2015ம் தேதி தாவா சொத்தில் உள்ள எனது சுவாதீனத்தை பிரதிவாதி இடையூறு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ள சங்கதி தவறு என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ராதா என்னை எந்தவிதமான தொல்லையும் செய்யவில்லை. வழக்கு தாவா சொத்தின் சுவாதீனத்தில் நான் இல்லாதபடியால் பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி உள்ளது நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கிற்கு கூறி உள்ள வழக்கு மூலம் பொய்யானது என்றால் சரியல்ல. வழக்கு மூலம் தவறாக உள்ளபடியால் அதன் அடிப்படையில் இவ்வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 6.9.1989ம் தேதியிலலேயே தாவா சொத்தினை வாய்மொழியாக கிரயம் பெற்றுள்ளார். அந்த வாய்மொழிகிரயத்தின் அடிப்படையில் சுவாதீனம் அவரிடம் ஒப்படைக்க பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அரசாங்கம் முறையாக விசாரணை செய்து அதன் அடிப்படையில் பட்டா வழங்கி உள்ளது. அதன் வழியாக 1ம் பிரதிவாதி அவரது மகன்களுக்கு தாவா சொத்தினை செட்டில்மெண்ட்ட செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை அபகரிக்கும் நோக்கத்துடன் பொய்யாக சங்கதிகளை வைத்து நான்

இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அ.வ.எண். 247/15 அனுமதிக்கபடவேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.